**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 09.02.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, விதை மையம் சார்பில் **பயிர் இரகங்கள் மற்றும் உழவர்களின் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் (PPV&FRA), 2001 இன் கீழ் "பாரம்பரிய மற்றும் உழவர்களின் இரகங்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி"** குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தை மாதம் 29-ம் நாள் (12.02.2026) அன்று கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. அதில் 100 விவசாயிகளுக்கு இப்பயிற்சியானது வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் பாரம்பரிய விதைகளை சட்டபூர்வமாக பாதுகாப்பது, புதிய இரகங்கள் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகளை பற்றி வல்லுநர்களால் விளக்கம் அளிக்கப்படும். மேலும், புதிய பயிர் வகைகளின் பதிவு முறை மற்றும் விவசாயிகளின் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் இழப்பீடு மற்றும் பலன்களை பற்றி தெரிவிக்கப்படும். இந்த பயிற்சி மூலம் உங்களது உழவர் உரிமைகளை குறித்து தெளிவு பெற்று எதிர்காலத்தில் தங்களது பயிர் வகைகளை பதிவு செய்து சட்டப் பூர்வ பாதுகாப்பு பெற்று பயனடைவீர்கள். ஆகையால், விருப்பமுள்ள விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொள்ள தங்களின் பெயரை முன்பதிவு செய்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

விழிப்புணர்வு கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் 8012126747 / 7373259885 என்ற அலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பெயரை முன்பதிவு செய்து கொள்ளவும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**